


THE SUDAR OLI
# சுடர் ஒளி
Registered as Newspaper
30.03.2020 திங்கட்கிழமை தொடர்புக்கு 077 361 5555

## 122 பேருக்கு கொரோனா
### இன்றும் ஐவருக்கு உறுதியானது தொற்று

கொழும்பு, மார்ச் 30
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் ஐவர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 122 ஆக உயர்ந்துள்ளது. 2

## கொரோனா சந்தேகத்தில் யாழ். போதனாவில் 24 மணிநேரத்தில் 7 பேர் சேர்ப்பு
### இராணுவம், பொலிஸார், தாவடி, உரும்பிராய், ஆனைக்கோட்டை, மன்னாரைச் சேர்ந்தோர் உள்ளடக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 30
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் 7 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் கொரோனா ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொலிஸார், பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாய், தாவடியைச் சேர்ந்த பெண், ஆனைக்கோட்டை, உரும்பிராய், மன்னாரைச் சேர்ந்த 4 பேரே இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளனர். 2

## வடக்கு ஆளுநர் தலைமையில் நாளை முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 30
வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நாளை காலை 11 மணிக்கு முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப் 2



## 6,925 பேர் கைது

கொழும்பு, மார்ச் 30
ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் நேற்று முதல் இன்று மதியம் வரையில் 984 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் காலப்பகுதியில் 166 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
கடந்த 20 ஆம் திகதி வரை இன்று மதியம் வரையில் 6 ஆயிரத்து 925 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயிரத்து 678 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-114)

## கொரோனா அவசர அலைபேசி எண்
### வடக்கில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30
வடமாகாணத்தில் கொரோனா தொற்று நோயால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில், இவை தொடர்பாக சுகாதார ரீதியில் பொது மக்கள் தமக்கு தேவையான ஆலோசனைகளையும், தகவல்களையும் பெற்றுக் கொள்ள வாரத்தின் 7 நாள்களிலும் 24 மணி நேரமும் செயற்படும் வகையில் உதவி அழைப்பெண் சேவையானது இன்று முதல் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப் 2

## பங்குச் சந்தை இன்றும் பூட்டு!

கொழும்பு, மார்ச் 30
கொழும்பு பங்குச் சந்தை இன்றும் மூடப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தை நீடிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ள நிலையில் கொழும்பு பங்குச் சந்தை அதிகாரிகள் இந்தத் தீர்மா 2

## தமிழ்க் கைதிகளை கொல்வதற்குச் சதி!
### நாடு கடந்த தமிழீழ அரசு குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 30
அச்சுறுத்தலாக மாறியுள்ள கொரோனா வைரஸ் தொற்றின் நெருக்கடி நிலையை இலங்கை அரசு தனக்குச் சாதகமாக்கிக் 2

## ஏப்ரல் 7 வரை யாழில் ஊரடங்கு?

யாழ்ப்பாணம், மார்ச் 30
யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் ஏப்ரல் 7ஆம் திகதி வரை தொடர்ந்து நீடிப்பதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2

## ஊரடங்கு எப்போது முற்றாக நீக்கப்படும்?
### பதிலளிக்கிறார் பிரதி பொலிஸ்மா அதிபர்



கொழும்பு, மார்ச் 30
ஊரடங்கை முற்றாக நீக்குவதும் அதை மாதக் கணக்கில் நீடிப்பதும் நாட்டு மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். 2

## யாழ். மேயருக்கு மீனவர்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 30
மீனவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்காது, மீன்பிடி தொழிலை மாத்திரம் நிறுத்தக் கோருவது அநீதியான கோரிக்கை என யாழ்ப்பாணம் கரையோரப்பகுதி மீனவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில், 2

## 132 பேர் இன்று வெளியேற்றம்

கொழும்பு, மார்ச் 30
வெளிநாடுகளிலிருந்து இலங்கை திரும்பிய பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் கண்காணிக்கப்பட்ட மேலும் 132 பேர் இன்று வீடு திரும்பியுள்ளனர். 2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

## 24 மணிநேரத்தில்...
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலிருந்து இவர்களது மாதிரிகள் எடுக்கப்பட்டு கொரோனா தொற்று உறுதிப்படுத்தலுக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இன்று இரவு பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெறும் என்று தெரியவருகின்றது.
தாவடியில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவரின் வீட்டிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ள பெண் ஒருவரே கொரோனா சந்தேகத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நபர், நெடுந்தீவுக்கு வெளிநாட்டவர்களுடன் சென்று வந்த நிலையில் அவரும் கொரோனா தொற்றுக்குரிய சந்தேகங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
உரும்பிராயைச் சேர்ந்த பழ வியாபாரி ஒருவரும் கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும், மன்னாரைச் சேர்ந்த இருவர் இன்று மாலை கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ,5)

## 122 பேருக்கு...
இன்று பிற்பகல் இலங்கை சுகாதார அமைச்சு வெளியிட்ட உத்தியோக பூர்வ அறிவிப்பில் இந்தத் தகவல் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதே வேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் நால்வர் இன்று குணமடைந்துள்ளனர். இவர்கள் நால்வரும் கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையிலிருந்து இன்று காலை வீடு திரும்பியுள்ளனர். இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவுக்கு ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், ஏனைய 104 தொற்றாளர்களும் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இதேவேளை, 117 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் உள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-22)

## வடக்கு ஆளுநர்...
படுகின்றது.
ஊரடங்குச் சட்டம் காரணமாக தற்போதுள்ள நிலைமை, கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கை, அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

## கொரோனா அவசர...
பட்டுள்ளது. 021221 7982 அல்லது 021222 6666 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை மேற்கொள்வதனூடாக பொதுமக்கள் இந்த சேவையை பெற்றுக் கொள்ள முடியும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ,5)

## பங்குச்சந்தை...
னத்தை எடுத்துள்ளனர்.
நாளை கொழும்புப் பங்குச் சந்தையைத் திறந்து அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பாக இன்று மாலை தீர்மானிக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 13 ஆம் திகதிக்கு பின்னர் 20ஆம் திகதி மாத்திரம் கொழும்பு பங்குச்சந்தை திறக்கப்பட்டது என்றும், அது 2 மணித்தியாலங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அன்று கொடுக்கல் - வாங்கல்கள் ஆரம்பித்தவுடனே விலை சுட்டெண் வீழ்ச்சியடைந்தன் காரணமாக இன்று வரை கொழும்பு பங்குச்சந்தையின் கொடுக்கல் - வாங்கல்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. (எ)

## தமிழ்க் கைதிகளை...
கொள்வதாகவும், சிங்களக் கைதிகள் மூலம் தமிழ்க் கைதிகளைக் கொல்ல அரசு சதி செய்வதாகவும் நாடு கடந்த தமிழீழ அரசு குற்றம் சாட்டியுள்ளது.
சிறைகளில் வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் போர்க் கைதிகளின் (அரசியற்கைதிகள்) உயிர்ப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துமாறு, இலங்கையின் ஐ.நா. வதிவிட பிரதிநிதிக்கும், இந்தியா, அமெரிக்கா மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் அறிவிக்கப்பட்டிருந்ததாக தெரிவித்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசு, தமிழ் போர்க் கைதிகள் இலங்கை அரசின் பின்புலத்துடன் சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்படலாம் என்ற அச்சத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.
தமிழ் போர் கைதிகளுக்கு நெருக்கமான வட்டாரங்களின் தகவல்களில், கொரோன வைரஸ் தொற்று தொடர்பில் சிறையில் ஏற்பட்ட கலவரத்தின் போது, சிங்கள கைதிகள் தமிழ்ப் போர்க் கைதிகளை தங்களுடன் இணைந்து வருமாறு அழைத்திருந்ததாகவும், இதற்கு தமிழ்க் கைதிகள் மறுத்துவிட்ட நிலையில், தமிழ்க் கைதிகள் மீது சிங்களக் கைதிகளுக்கு வெறுப்பு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசு, இந்த வெறுப்புணர்வைப் பயன்படுத்தி சிங்களக் கைதிகள் ஊடாக தமிழ்க் கைதிகளைப் படுகொலை செய்யலாம் என்ற அச்சத்தையும் வெளிப்படுத்தியுள்ளது. (ஒ,5)

## ஏப்ரல் 7 வரை...
கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக கடந்த 20ஆம் திகதியிலிருந்து நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 23ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதும் நீக்கப்படவில்லை. 24ஆம் திகதி காலையிலிருந்து பி.ப. 2 மணி வரை ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இதுவரை நீக்கப்படவில்லை. ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாணத்தில் நீக்கப்படுவது தொடர்பில், மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிடுகையில், எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் ஊரடங்கு தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கே வாய்ப்பு அதிகம் இருப்பதாகக் குறிப்பிட்டார். (ஒ,5)

## ஊரடங்கு எப்போது...
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
“கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. இதைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால் மக்கள் எமது கட்டளையை ஏற்று சட்டத்தை மதித்து நடக்க வேண்டும். வீட்டில் தனிமைப்பட்டு இருப்பதே இதற்கு மருந்து. ஆனால், அதிகமானவர்கள் ஊரடங்கு வேளையிலும் வீட்டுக்கு வெளியே திரிகிறார்கள். அவர்களால்தான் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதைவிட ஊரடங்கை நீக்கவேண்டும் என்பதிலேயே இப்போது எல்லோரும் ஆர்வமாக உள்ளார்கள். ஊரடங்கை முற்றாக நீக்குவதும் அதை மாதக் கணக்கில் நீடிப்பதும் நாட்டு மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது எங்களது கைகளில் அல்ல”- என்றார். (ஒ,5)

## யாழ்.மேயருக்கு...
கடந்த 25ஆம் திகதியில் இருந்து நாம் குறைந்த அளவு தொழிலுக்கே செல்கின்றோம். இருபத்தைந்து வீதமான தொழிலே தற்போது இடம்பெறுகின்றது. இந்த நிலையில் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். தற்போது ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடமுடியாது. எனவே இழுவைமடித்தொழில், களங்கட்டித் தொழில், கூட்டுத் தொழில் ஆகிய கரையோரத் தொழில்களிலேயே ஈடுபடுகிறோம். அவற்றையும் சந்தைப்படுத்துவது மிகவும் கஷ்டமானது. இவ்வாறான சூழ்நிலையில், இத்தகைய சிறிய தொழில்களையும் நிறுத்தக் கோருவது ஏமாற்றம் தருகின்றது. இதுவரை தொழில் இன்றிப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகளோ வேறு உதவிகளையோ பெற்றுத்தருவதற்கு ஏற்பாடுகள் எவற்றையும் செய்யாத மேயர், எமது வாழ்வாதாரத் தொழிலை கட்டுப்படுத்த மேற்கொள்ளும் செயற்பாடுகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் எனத் தெரிவித்தனர்.
யாழ். மாநகர எல்லைக்கு உட்பட்ட கரையோரப்பகுதிகளில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள இடைக்காலத் தடைவிதிக்குமாறு யாழ் .மாநகர சபை மேயர் இ.ஆனல்ட் வடக்கு மாகாண ஆளுநரிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## 132 பேர்..
தியத்தலாவை, புனானை உள்ளிட்ட மத்திய தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்களே இவ்வாறு வீடு திரும்பியுள்ளனர் என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். அவர்கள் இத்தாலி, தென்கொரியா மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட சில நாடுகளிலிருந்து இலங்கைக்குத் திரும்பியவர்களாவர் என்று இராணுவத் தளபதி மேலும் கூறினார்.
இதனிடையே, தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்களில் தங்கியிருந்த 77 பேர் நேற்று அவர்களது வீடுகளுக்குத் திரும்பியிருந்தனர். தென் கொரியா மற்றும் இத்தாலியிலிருந்து நாட்டுக்கு வருகை தந்த குறித்த குழுவினர், மாத்தறை மற்றும் கொழும்பு மாவட்டங்களை சேர்ந்தவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு கொரோனா தொற்றும் ஆபத்து

ஹற்றன்,மார்ச் 30
இலங்கையில் தோட்டங்களில் பணிபுரியும் சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றக் கூடிய கடும் ஆபத்து உள்ளது என்று இலங்கை தோட்ட ஊழியர் சங்கம் எச்சரித்துள்ளது.
இதனால் தோட்டங்கள் சார்ந்த நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்துமாறு, அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் நாத்அமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம், எழுத்து மூலமாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வரும் சூழ்நிலையில்,தேயிலைத் தொழிலைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையை மீளாய்வு செய்யுமாறு அமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். (க)

# அத்தியாவசியப் பொருள்களைப் பகிருகின்ற அதிகாரம் மாவட்ட, பிரதேச செயலர்களிடம்!

## பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை

கொழும்பு, மார்ச் 30
பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்துகளைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரத்தை மாவட்ட மற்றும் பிரதேச செயலர்களுக்கு வழங்கும் சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சேவைகளை வழங்குவதற்காக மாவட்ட ரீதியில் நிறைவேற்று அதிகாரிகளை கொண்ட உதவி அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.
அரச மற்றும் தனியார் வர்த்தக நிறுவனங்கள், பல்பொருள் விற்பனை நிலையங்கள் மற்றும் வர்த்தக சங்கங்களின் பங்களிப்புடன் நடமாடும் சேவையை ஏற்பாடு செய்து சகல வீடுகளுக்கும் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.
அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளுக்குத் தேவையான ஊரடங்கு சட்ட அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்குப் பொலிஸ் நிலையங்களில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் பொது நிர்வாக அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. (ஒ,5,22)



ஊரடங்கின் உச்சம்; வற்றிப்போகும் நன்னீர் தேக்கத்தில் அன்றாடப் பசிபோக்க மீன் தேடும் மீனவர். (ப)



# ஊரடங்கால் பாதிப்பு விவசாயிகள் முறையீடு

யாழ்ப்பாணம், மார்ச் 30

விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள், அறுவடைக்கான போக்குவரத்து அனுமதிகள் எனப் பல விடயங்கள் தொடர்பில் தாம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். அதிக விவசாயப் பகுதிகளைக் கொண்டுள்ள சுன்னாகம் மற்றும் புன்னாலைக்கட்டுவன் பகுதிகளுக்கு முன்னாள் விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் சென்றபோதே, இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாய மருந்துகள், உரங்கள், கால்நடை மருந்துப் பொருள்கள், தீவனங்கள் போன்றவற்றை தொடர்ச்சியான ஊரடங்கால் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை உள்ளது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகள், வழிமுறைகள் தொடர்பில் உரிய திணைக்கள அதிகாரிகளுடனும் காவல்துறையினருடனும் கலந்துரையாடி விரைவில் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அங்கஜன் இராமநாதன் உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-20)

# காருக்குள் கசிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 30

புத்தூர் பெரிய பொக்கணைப் பகுதியில் காருக்குள் வைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். காங்கேசன் துறை விசேட குற்றத்தடுப் புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, அந்த இடம் சுற்றிவளைக்கப்பட்ட போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கசிப்பு உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் அங்கிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. (க-111)

# 2,200 முறைப்பாடுகள்

கொழும்பு, மார்ச் 30

தற்போது ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 2 ஆயிரத்து 200 முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளன என்று நுகர்வோர் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்வது தொடர்பான முறைப்பாடுகளே அதிகம் கிடைத்துள்ளன என்று நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர். கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார். (எ)

# 60 குடும்பங்களுக்கு தென்மராட்சியில் உதவி

சாவகச்சேரி,மார்ச் 30

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் நால்வர் இணைந்து பொருளாதார நிலையில் பின் தங்கிய 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்கினர்.

மீசாலை , கோயிலாமனை, தெருவாரம், எழுதுமட்டுவாழ் போன்ற இடங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான கஜேன் , நிதர் சன் , துர்க்கா , திலகராணி ஆகியோருடன் சமூகசெயற்பாட்டாளர் க.சியந்தனும் இணைந்து இந்த உதவியை கடந்த சனிக்கிழமை வழங்கினர். (ஐ-159)




# வழிபாட்டுத் தலங்கள் மக்களுக்கு உதவலாம்

## விக்னேஸ்வரன் ஆலோசனை

யாழ்ப்பாணம்,மார்ச் 30

வழிபாட்டுத் தலங்களில் நடைபெற வேண்டிய வருடாந்தத் திருவிழாக்கள், பூசைகள், ஆராதனைகள், வழிபாடுகள் அனைத்தும் கொரோனாவால் ஸ்தம்பிதமாகியுள்ளன. அதனால் சமயச் சடங்குகளுக்காகப் பயன்படுத்த ஒதுக்கப்பட்ட நிதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க ஆலயங்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணி யின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் ஆலோசனை வழங்கியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாளாந்தம் கிடைக்கும் வருமானத்தை இழந்துள்ள குடும்பங்கள் பல பட்டினியின் கோரப் பிடிக்குள் அகப்பட்டு தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்தக் காலகட்டத்தில் கோயில்களில் திருவிழாக்கள் செய்ய இருந்த உபயகாரர்கள், வணக்கஸ்தலங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் அறநிலையக் காப்பாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பட்டினியால் வாடும் பல வறிய குடும்பங்களுக்கு ஓரிரு வாரங்களுக்கேனும் பாவிக்கக்கூடிய உலர் உணவுப் பொதிகளை வழங்க முடியும்.

தயவு செய்து எமது தமிழ் மக்கள் இந்த கைங்கரியத்திலாவது தங்கள் முரண்பாடுகளை முன்வைக்காது, முனைந்து வந்து உதவியளிக்க முன்வர வேண்டும்- என்றார்.(க)

# ஒன்று கூடி ஜெபிப்பதை தவிர்க்கவும்!

## ஈசிமிசன் பிஷப் வேண்டுகோள்

வவுனியா, மார்ச் 30

கொரோனா அச்சம் காரணமாக நாடு முழுவதும் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்ட நேரத்தில், சபை கூடுதலைத் தவிர்க்குமாறு வவுனியா ஈசிமிசன் பிஷப் .ராஜசிங்கம் கேட்டுக்கொண்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் சூழ்நிலை காரணமாக ஊரடங்குச் சட்ட நேரத்தில் சபை கூடுதலையும் , கூடி ஜெபம் செய்வதையும் தவிர்க்குமாறும் போதகர்களிடம் அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

சமுதாயத்துக்கும், அரசாங்கத்துக்கும் முடிந்தளவு ஒத்துழைப்பைக் கொடுக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இப்படியான சம்பவங்களைக் கேள்விப்படுகிறோம். எனவே இப்படியான நடவடிக்கைகளிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய ஜெபங்களை உங்களது வீடுகளில் இருந்து செய்தால் போதுமானது. தேசத்துக்காக ஜெபிப்போம் விரைவாக இந்தச் சூழ்நிலை மாறும். ஒத்துழைப்புக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன்-என்றார். (ப-110)

# மருந்துப் பொருள்கள் தபாலில் வீடுகளுக்கு!

கொழும்பு, மார்ச் 30

கொரோனாவின் ஆபத்தாலும் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தாலும் மருந்துப் பொருள்களை பெற்றுக்கொள்ளும் முறை தொடர்பில் பொதுமக்கள் தற்போது அதிக கவனம் செலுத்தியுள்ளனர். இந்த நிலையில், நிறை அல்லது தூரத்தைப் பொருட்படுத்தாது 75 ரூபாவுக்கு வீட்டுக்கே மருந்துப் பொருள்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அரச மருத்துவமனைகளில் கிளினிக்குக்காகப் பதிவு செய்துள்ள நோயாளர்களுக்கு மாத்திரமே இவ்வாறு மருந்துப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

“தாம் சிகிச்சை பெறும் மருத்துவமனைகளுக்குத் தொலைபேசி ஊடாக அழைத்து, தமது கிளினிக் இலக்கத்தைக் கூற வேண்டும். பெயரைக் கூறவும். அடுத்ததாக முகவரியைக் கூற வேண்டும். தொடர்பை ஏற்படுத்தக்கூடிய தொலைபேசி இலக்கத்தைக் கூற வேண்டும். அதனைத் தொடர்ந்து உங்களின் மருந்துகள் பொதி செய்யப்பட்டு தபால் மூலம் விநியோகிக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ஒருவர் அவிசாவளையில் இருக்கக்கூடும். அவ்வாறானவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று, உங்களின் கிளினிக் புத்தகத்தை காண்பிக்க வேண்டும். அப்போது மருத்துவமனையின் ஊடாக வழங்கக்கூடிய மருந்துப் பொருள்களை வழங்கப்படும். கிளினிக் செல்லும் மருத்துவமனைக்கு அழைப்பை ஏற்படுத்தி மருந்துப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது” என்று மருத்துவர் பிரியந்த அத்தபத்து தெரிவித்துள்ளார்.

“மருந்துகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம். ஆனமடுவ பதவிய பகுதியில் நேற்று மருந்துகள் விநியோகிக்கப்பட்டன. தபால்காரர்களே அந்தப் பொறுப்பை ஏற்றுள்ளனர். நிறை மற்றும் தூரத்தை பொருட்படுத்தாது, பொதியொன்றுக்கு 75 ரூபா என்ற குறைந்த கட்டணத்தையே நாம் அறவிடுகின்றோம். அரச மருந்தகங்களில் வழங்கப்படும் மருந்துப்பொருள்களையும் விநியோகிக்கின்றோம்” என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ,5,22)



## 75 குடும்பங்களுக்கு உலர் உணவுகள்

சுன்னாகம், மார்ச் 30

ஊரடங்கு சட்டத்தால் பாதிக்கப்பட்ட கூலித்தொழில் புரியும் 75 குடும்பங்களுக்கு ஒரு கிழமைக்கு தேவையான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

சுன்னாகம் கதிரமலை ஆலய பிரதம குரு ஸ்ரீகாந்தக் குருக்கள் மற்றும் தொண்டர்கள் இணைந்து சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இந்த உதவியை நேற்று வழங்கியிருந்தனர். (ஐ-159)

## மறைந்த நீதியரசருக்கு சட்டத்தரணிகள் அஞ்சலி

வவுனியா, மார். 30

மறைந்த முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். ஆனந்தகுமாரசாமிக்கு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் தமது அஞ்சலியை தெரிவித்தனர்.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். ஆனந்தகுமாரசாமி கொழும்பில் நேற்று இயற்கை எய்தினார். அவருடைய மறைவுக்கு வவுனியாவைச் சேர்ந்த சட்டத்தரணிகள் தமது அஞ்சலியை நேற்றுச் செலுத்தினர். “1970களில் அன்னார் நீதிபதியாக வவுனியாவில் கடமையாற்றியபோது இளம் சட்டத்தரணியாக நான் தொழிலை ஆரம்பித்திருந்தேன். சட்ட ஞானமும் மற்றவர்களை மதிக்கும் பண்பும் கொண்ட ஓர் உயர்ந்த நீதிபதியாவார். இக்குணாதிசயங்களே அவரை இந்நாட்டின் உயர் நீதிமன்றத்திற்கு எடுத்துச்சென்றது. அவரது இழப்பு எம் அனைவருக்கும் பேரிழப்பாகும். நான் தொழில்புரிந்த நீதிபதிகளில் அவர் ஓர் கனவான் நீதிபதியாவார்” என இதுதொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மு. சிற்றம்பலம் தெரிவித்தார். (ப-110)

## 15 வயதுச் சிறுமி கர்ப்பிணியாக மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 30

15 வயதுச் சிறுமியொருவர், சிறிய தந்தையால், வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில். அவர் 8 மாதக் கர்ப்பணியாக சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தில் நடந்துள்ளது. மீட்கப்பட்ட சிறுமி, சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து, சிறுமியின் வீட்டை முற்றுகையிட்ட அதிகாரிகள் சிறுமியை மீட்டுள்ளனர்.

கொழும்பில் இருக்கும் சிறிய தந்தையின் வீட்டுக்குத் தனது தாயுடன், கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் சிறுமி சென்ற போது, சிறிய தந்தையால் சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. கர்ப்பமடைந்த சிறுமி வீட்டுக்குள்ளே முடக்கப்பட்டிருந்தமை பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறிய தந்தையை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-150)





## தொற்று நீக்கி விசிறல் யாழில் இன்றும் தீவிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொரோனா அச்சம் காரணமாக முன்னெடுக்கப்பட்டு வரும் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணிகள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் இன்றும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. பொது மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் கொரோனா கிருமித் தொற்று நீக்கி மருந்து விசிறல் நாடளாவிய ரீதியில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், யாழ்ப்பாணத்திலும், சிறப்பு அதிரடிப் படையினரின் கொழும்பிலிருந்து வந்த அணியினர், பொலிஸார் உள்ளிட்டோர் இந்தப் பணியை முன்னெடுத்து வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்த நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் கூடும் இடங்களில் கிருமித் தொற்று நீக்கி விசிறப்பட்டு வருகின்றது. (ப-106)

# விவசாயிகளிடம் நெல் பெற்று மீனவர் குடும்பங்களுக்கு அரிசி

முல்லைத்தீவு,மார்ச் 30

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதி மீனவ குடும்பங்களுக்கு, கிராம அமைப்புக்கள் உதவி வழங்கி வருகின்றன.

ஊரடங்கு வேளையில் தொழில் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலையில், நாளாந்த வருமானத்தை இழந்துள்ள குடும்பங்களின் நன்மை கருதி, கிராம அமைப்புக்கள் உதவிக்கரம் நீட்டியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணைக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயக் குடும்பங்களிடம் இருந்து நெல்லைப் பெற்று, அதே கிராமங்களில் வசிக்கும் மீனவர் குடும்பங்களுக்கு அரிசியாக வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கிராம அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு முதற்கட்டமாக 60 குடும்பங்களுக்கு அரிசி வழங்கப்பட்டுள்ளது. (க-19)



# சமூக இடைவெளி முக்கியம்

கொழும்பு, மார்ச் 30

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் தருணங்களில் அனைவரும் சமூக இடைவெளியினை பின்பற்ற வேண்டியது அவசியம் என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டிற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா வலியுறுத்தியுள்ளார்.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பிரதேசங்களில் பொதுமக்கள் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான உலக சுகாதார நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள ஒரு மீற்றருக்கும் அதிகமாக இடைவெளியை ஒருவரிடத்திலிருந்து பிறிதொருவர் பேணுவது அவசியமாகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் எமக்கு வெளிப்படையாக தெரியாது விட்டாலும் சமூகத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் அடையாளப்படுத்தப் படாதிருப்பதானது குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவே உள்ளதாகவும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டார். (ஓ,5)





# மாட்டு வண்டியில் மரக்கறி விற்பனை

காரைநகர்,மார்ச் 30

காரைநகர்ப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான மரக்கறிகள், ஒவ்வொருவருடைய வீடுகளுக்கும், மாட்டு வண்டியில் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. காரைநகர் இளம் விவசாயிகள் கழகம் இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையை அடுத்து நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் மக்கள் ஒன்றுகூடவும், அவர்களுக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறான மக்கள் காய்கறிகளைப் பெற்றுக்கொள்வதானால், உழவர் சந்தை மற்றும் உள்ளூரில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் ஒவ்வொருவராகச் சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

மக்கள் ஒன்று கூடுவதைத் தடுக்கவும், கொரோனா தொற்று நோயில் இருந்து மக்களைப் பாதுகாக்கவும், காரை இளம் விவசாயிகள் கழகம் முயற்சிசெய்துள்ளது. மக்களுக்குத் தேவையான மரக்கறிவகைகள் பொதி செய்யப்பட்டு வீடுவீடாக மாட்டு வண்டியில் சென்று விற்பனை செய்வதற்கு அந்தக் கழகம் முடிவு செய்து அதைச் செயற்படுத்தி வருகிறது. இந்த மரக்கறிப் பொதியில் தக்காளி, வெங்காயம், , கறிமிளகாய், மிளகாய் , மரவள்ளி, வெண்டி, பீற்றூட் ஆகியன உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-7)

# தொலைபேசி வாயிலாக மருத்துவ ஆலோசனைகள்

கொடிகாமம்,மார்ச் 30



சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மாதாந்தக் கிளினிக் வரும் நோயாளிகளின் நன்மை கருதி அவர்களுக்கான ஆலோசனை மற்றும் மருந்துகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கு 021 227 0932 மற்றும் 021 227 1150 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் இந்த நன்மையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று மருத்துவமனை அத்தியட்சகர் திருமதி ம.டயாளினி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் அரச மருத்துவமனைகளில் மாதாந்தம் சிகிச்சை பெறுபவர்கள் தமது மாதாந்த மருந்துகளை வீடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளவும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் படி மருந்துகளை அவர்களது வீடுகளுக்கே சென்று வழங்கும் செயற்பாடுகள் சில மருத்துவமனைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-159)

# பிரதேச சபை உறுப்பினர் கைது

கொழும்பு, மார்ச் 30

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடற்படையினரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# ஊரடங்கை மீறியவருக்கு பிடுங்கப்பட்டது காற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கை மீறி உலாவிய இளைஞனுக்கு பொலிஸார் நூதன தண்டனை வழங்கினர். அவரது துவிச்சக்கர வண்டியின் காற்றைப் பிடுங்கி நடந்து செல்லுமாறு பணித்தனர். இந்தச் சம்பவம் மல்லாகத்தில் இன்று காலை இடம்பெற்றது.

சமூக இடைவெளியைப் பேணுவதற்காக ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஊரடங்குச் சட்டத்தை மீறுவோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுகின்றனர். நாடு முழுவதும் 6 ஆயிரத்து 127 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருப்பினும் ஊரடங்கு நேரத்தில் சிலர் நடமாடி வருகின்றனர். அவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் தடியடி மேற்கொள்கின்றனர். மல்லாகம் சந்தியில் கடமையிலிருந்த பொலிஸார், வீதியில் சென்ற இளைஞனை மறித்து விசாரணை செய்தனர். அவரிடம் ஊரடங்குச் சட்டத்தில் பயணிப்பதற்கான அனுமதிப் பத்திரம் இல்லை என்பதும், அவர் ஊர் சுற்றுகின்றார் என்பதையும் அறிந்த பொலிஸார், அவரது துவிச்சக்கர வண்டியின் காற்றைப் பிடுங்கி நடந்து செல்லுமாறு பணித்தனர். (ஓ,5)



## திருகோணமலையிலிருந்து
# படகில் வந்த இளைஞர்கள் முல்லைத்தீவில் கைது

முல்லைத்தீவு,மார்ச் 30

திருகோணமலையில் இருந்து கடல் மார்க்கமாக முல்லைத்தீவுக்கு வருகை தந்த நான்கு இளைஞர்கள் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த படகு முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள நிலையில், கடற்றொழில் செய்பவர்கள் சுமார்2 கிலோ மீற்றர் தூரத்துக்குச் சென்று தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

கடற்றொழில் செய்வதற்கான எந்த உபகரணங்களும் இல்லாது, திருகோணமலையில் இருந்து 40 குதிரை வலுக் கொண்டஇயந்திரம் பூட்டப்பட்ட படகில், முல்லைத்தீவு வலைஞர்மடம்ப குதிக்கு வருகை தந்த நான்கு இளைஞர்கள் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர். அவர்கள் வருகை தந்த படகிலிருந்து ஒரு லட்சத்து 59 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டது. இவர்கள் சட்ட விரோதமாக முல்லைத்தீவிலிருந்து கஞ்சாவைக் கடத்திச் செல்வதற்குவந்தார்களா? என்ற சந்தேகத்தில், அவர்கள் வந்து இறங்கிய இடத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் எந்தவிதமான பொருள்களும் கண்டுபிடிக்கப் படவில்லை. நான்கு பேரும் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களை நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். (க-19)



## அன்பின் கரத்தால் மக்களுக்கு நிவாரணம்

வவுனியா,மார்ச் 30

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால், அன்றாடம் கூலி வேலை செய்து தங்களுடைய வாழ்வைக் கொண்டு நடத்தும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் ஊடாக உலர் உணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

வவுனியா பொன்னாவரசங் குளத்தில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு பொருள்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு, செல்வபுரம், பரந்தன் ஆகிய பகுதிகளிலும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (க-222)



## பாண் மூலம் பரவாது கொரோனா!

கொழும்பு, மார்ச் 30

பாண் அல்லது பேக்கரி உற்பத்திப் பொருள்கள் மூலம் கொரோனா வைரஸ் பரவக்கூடும் என்று சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் தகவலில் உண்மை இல்லை என்று மருத்துவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது குறித்து ஐ.டி.எச் தொற்றுநோய் மருத்துவமனையின் உடற்கூறியல் நிபுணர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம கூறுகையில், கொரோனா வைரஸ் உணவு மூலம் பரவுவதில்லை. முறையான சுகாதார விதிமுறைகளை பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவுகளால் எந்த ஆபத்துமில்லை, விற்பனையாளர்கள் உரிய சுகாதார விதிமுறைகளை கடைப் பிடிக்கிறார்களா என்பதை கவனத்தில் கொண்டால், எவ்வித பாதிப்புமில்லை எனத் தெரிவித்துள்ளார். (ஒ,5)

## ரத்னாயக்காவின் விடுதலை
# கோத்தாவின் இழி செயல்
## ஐங்கரநேசன் கண்டனம்

யாழ்ப்பாணம்,மார்ச் 30

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ, இராணுவ அதிகாரி சுனில் ரத்னாயக்காவுக்கு வழங்கப்பட்டிருந்த மரண தண்டனையை நீக்கிப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார். கொரோனாத் திரைமறைவில் அவர் இந்த இழி செயலை அரங்கேற்றியுள்ளார்.

இவ்வாறு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

மிருசுவில் படுகொலைக் குற்றவாளி சுனில் ரத்னாயக்காவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருப்பது தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மிருசுவில் படுகொலையாளிக்கு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை, இலங்கையில் நீதித்துறையின் உச்ச அமைப்பான உயர் நீதிமன்றமும் உறுதி செய்திருந்தது. ஜனாதிபதி சிப்பாயை விடுதலை செய்திருப்பதன் மூலம் நிதித்துறையின் மாண்பையே கேலிக்கு ஆளாக்கியுள்ளார்.

தமிழின அழிப்புக்குச் சர்வதேச விசாரணை வேண்டும் என்று பல தரப்பும் வலியுறுத்தி வருகின்ற நிலையில், நீதிமன்றில் அடையாளம் காணப்பட்ட போர்க்குற்றவாளியை ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார்.

இதன் மூலம் இராணுவம் தொடர்பான உள்ளக விசாரணைக்கோ அல்லது சர்வதேச விசாரணைக்கோ இலங்கையில் இடமேயில்லை என்று ஜனாதிபதி தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக் கோரிக்கைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாத ஜனாதிபதி, தனது இரத்தம் என்ற ஒரே காரணத்துக்காகப் படுகொலை புரிந்த சிப்பாயை விடுதலை செய்துள்ளார். இதன் மூலம் ஜனாதிபதி தமிழ் மக்கள் தனக்கு ஒரு பொருட்டே அல்ல என்பதையும் சிங்கள மக்களுக்கான அதிபரே தான் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்- என்றுள்ளது. (க)

# விலை அதிகரிப்பை உடன் கட்டுப்படுத்த நடவடிக்கை
## வடக்கு முழுவதும் களமிறங்கும் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

ஊரடங்குச் சட்டம் காரணமாகவும், நாட்டில் தற்போதுள்ள நிலைமை காரணமாகவும் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த வடக்கு மாகாணம் முழுவதும், விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் களமிறக்கப்படவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விசேட செயலணியின் கூட்டம் இன்று காலை இடம்பெற்றது. கூட்டம் முடிவடைந்த பின்னர் வடக்கு மாகாண அதிகாரிகள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆணையாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஒ,5)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 30.03.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.